**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 04.11.2025**
**OS. No. 62/2022**
**வழக்கு சாட்சி PW.1–மணிமேகலை, க/பெ.கார்த்திகேயன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

1. என் தாத்தா சுப்ரமணிய முதலியார் பெயரிலுள்ள பட்டா எண்.903 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. என் தாயார் சிவகாமி அவர்களின் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.
3. என் தாயார் சிவகாமி அவர்களின் வாரிசு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. 2ம் பிரதிவாதி கடந்த 27.11.2020ம் தேதியில் வழக்கறிஞர் மூலம் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்புப சார்வு நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.
5. தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.
6. தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பு கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.
7. எங்களுடைய வம்சாவழி பட்டியல் அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.
8. என் தாத்தா சுப்ரமணிய முதலியார் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1) தாவா சொத்தில் 6, 7 மைனர் பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். மைனர் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் வராமல் தீர்ப்பாக 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.